செ.வெ.எண் : 21/ மே நாள் : 23.05.2021

**இராமநாதபுரம் மாவட்டம்**

**முழு ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு தடையின்றி காய்கறிகள் மற்றும் பழங்கள் விநியோகம் செய்தல் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம்**

**கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.எம்.பிரதீப் குமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

முழு ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு காய்கறிகள் மற்றும் பழங்கள் தங்கு தடையின்றி விநியோகம் செய்திட தேவையான முன்னேற்பாடு நடவடிக்கைகள் மேற்கொள்தல் தொடர்பாக கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (23.05.2021) இராமநாதபுரம் மாவட்ட மொத்த காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை சங்க பிரதிநிதிகள் மற்றும் தோட்டக்கலைத் துறை சார்ந்த வட்டார உதவி இயக்குனர்கள் உடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா பரவல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 24.05.2021 முதல் 31.05.2021 வரையில் தளர்வுகள் இல்லாத முழு ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இக்காலகட்டத்தில் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊரக பகுதிகளுக்கும் ஒவ்வொரு குக்கிராமம் வாரியாக பொதுமக்களுக்கு தேவயையான காய்கறிகள் மற்றும் பழங்கள் விநியோகிப்பதை உறுதி செய்திட வேண்டும். காய்கறி விநியோக வாகனங்களுக்கு அந்தந்த வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அனுமதி சீட்டுகள் வழங்குவார்கள். வியாபாரிகள்/உழவர் உற்பத்தி குழு/ உழவர் ஆர்வலர் குழுக்கள் தங்களது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அனுகி அனுமதி சீட்டு பெற்றுக் கொள்ளலாம்.

ஊராட்சி ஒன்றியம் வாரியாக தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் தொடர்பு எண்கள்விபரம்: மண்டபம் மற்றும் இராமநாதபுரம் வட்டாரத்திற்கு 72994 62970, போகலூர் மற்றும் நயினார்கோவில் 86676 02994, ஆர்.எஸ்.மங்கலம் 96595 84931, திருவாடானை 97513 81492, கமுதி 94891 66421, முதுகுளத்தூர் மற்றும் பரமக்குடி 94885 40830 கடலாடி 75980 27841 திருப்புல்லாணி 82202 88448 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். வாகனங்களில் விற்பனை செய்பவர்கள் அதிகபட்ச காய்கறி வகைகளை வண்டியில் வைத்து கொடுக்கும்படியும், கொரோனா பாதுகாப்பு வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.மேலும் காய்கறிகளை கூடுதல் விலைக்கு விற்பனை செய்தாலோ அல்லது தங்கள் பகுதிக்கு வரவில்லை என்றாலும் பொதுமக்கள் தங்களது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்களை தொடர்பு கொள்ளலாம்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இ.கார்த்திக்,இ.கா.ப., சார் ஆட்சியர் டாக்டர்.என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., தோட்டக்கலை துணை இயக்குநர் திரு.நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**